தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VII.—No. 5] MADRAS:—SUNDAY JANUARY 29, 288. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

மல்தயூசியன்களுக்கு உபத்திரவம். | மோட்சஉலகம் எங்கேயிருக்கிறது.
இந்துசோதிடம.
ஸ்ரீ லோகாஞ்சனி.

ஜனவிர்த்தியை மட்டுப்படுத்த வேணுமென்கிற மல்தியூசியன்களுக்கு உபத்திரவம்.

ஏழைகளாய்ச் சங்கட்டப்பட்டுக்கொண்டிருக்கிற ஜனங்களைத் துனபத்திலிருந்து விலக்கும்வகையை ஜனங்களுக்குள் தற்காலத்திலே நாட்டாண்மையுடையவர்களாயிருப்பவாகள தடை செய்வதாகக் காணுகிறது. இங்கிலாந்தும் ஸ்காத்லாந்தும் ஐயர்லாந்தும் வேல்சும் சேர்ந்து ஒரே பெயர்கொண்ட யூனைட்டெட் கிங்கிடம் என்னும் ராச்சியத்தின் ஜனரல் மெடிக்கல் கவுன்சில் சங்கத்தார் இரண்டுநாள் சாட்சி விசாரணைபண்ணித் தீர்க்காலோசனை செய்தபின்பு, சென்ற நவம்பர் மீ 26உ சுக்கிரவாரம், லீட்ஸ்பிரதேசத்து டாக்டர் ஏச். எ. ஆல்பட்டு என்பவருடைய பேரை ரிஜிஸ்தரிலே அடித்துப் போடும்படி தீர்மானஞ் செய்தார்கள். எதைப்பற்றி யெனில், ஜன விர்த்தியை நிர்த்தோஷமாய் மட்டுப்படுத்த பிரான்ஸ் தேசத்தில் உபயோகித்து வரப்பட்ட சிகிச்சைகளில் சிலவற்றை விவரமாகக் கூறி, ஜனங்கள் போஷிப்பதற்கும் படிப்பிப்பதற்கும் தங்களுக்குள்ள சக்தி யளவுக்கேற்றவாறு விவேகத்துடனே மட்டாகச் சந்தானவிர்த்தி செய்துகொள்ளும்படி அவர்களுக்குவழிகாட்டியிருக்கிற "ஒயிவ்ஸ் ஹாண்டுபுக்" என்னும் நான்கணாவிலையுள்ள ஒரு சிறுபுத்தகம் மேறபடி டாக்ட்டர் ஆல்பட்டினால் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டதென்பதுபற்றித்தான். மேற்படி தீர்மானஞ் செய்த வைத்தியசங்கத்தில் கூடியிருந்த நீதிபர்கள் முப்பத்திரண்டு பேர். அவர்கள் அந்தப்புத்தகம் யாருக்காக உத்தேசிக்கப்படவில்லையோ அவர்கள் கையில சிக்கி, அவர்களுக்குத் தீமை பயக்கும்படியானதாயிருக்குமென்று சொல்லி, அப்படிப்பட்ட விலைகுறைவான புஸ்தகத்தை டாக்ட்டர் ஆல்பட்டு பிரசுரஞ் செய்தது அவருடைய உத்தியோக முறைமைக் கடாதகாரியமாதலால் அது அவர்பேரில் குற்றமாகுமென்கிற தீர்மானத்திற்கு வந்தார்கள். இது அமபட்டக்கத்தி விவகாரமென்று சொல்லப்பட்டதாயிருக்கிறது; அதாவது, அம்பட்டக் கத்தியைக் குற்றஞ் செய்வதற்கும் உபயோகப்படுத்தக்கூடுமென்பதே. அதற்கு மறுமொழி அம்பட்டக்கத்தி சவரப்பதற்கிருக்கிறதேயல்லாமல் கொல்லுவதற்கல்லவென்பது உண்மையே. [கடவுள்சிருஷ்டியை ஒப்புக்கொள்ளுகிறவர்கள் ஜலமானது ஜீவனுக்காதாரமாயிருக்க, சிலசமயங்களில் அதனால் மரணமுண்டாவதுபற்றி என்னசொல்லுவார்களோ?] அந்த நியாய பரிபாலனச் சங்கத்தார் தங்கள் தீர்மானத்தைச் சொல்லியபின்பு, அந்த நியாயாதிபதிகள் அல்லது ஜூரிகளில் ஒருவராகிய மிஸ்டர். மக்னமாரா என்பவர்—டாக்ட்டர் ஆல்பட்டினுடைய சிறு புத்தகத்திலுள்ள விளம்பரங்களிலொன்றிலே கட்டணவீதங்களைக் கண்டு, தன்வீட்டிற்கு வருகிறவர்களுக்குச் சிகிச்சை செய்வதாகச் சொல்லியிருக்கிறதைப்பற்றி, முப்பதுபேர்கூடிய அந்த விரதையான நியாய சாஸ்திரக்கூட்டத்தைச் சேர்ந்த அவருக்கும் இன்னும் அநேகருக்கும் தீர்க்காலோசனை செய்வதற்கிடமுண்டாயிற்றென்று என்னோடு சொல்லினர். இதனால் சகல விஷயங்களிலும் மிகவும் முக்கியமானவிஷயத்தை மானிடசாதி தெரிந்துகொள்ளாதிருக்கவேண்டுமென்கிற தீர்மானத்திற்கு கிட்டத்தட்ட ஏகமனதாய் ஒருமித்த நியாயாதிபதிகளின் லட்சணம் இப்படிப்பட்டதென்று ஒருவாறு தெரிந்துகொள்ளலாம்: அந்த முக்கியமானவிஷயமாவது—அநேக வியாதிகளும், நமது மரணவீத ஜாபிதாக்களிலே எழுதியிருக்கிற சீக்கிரமரணங்களும் உண்டாவதற்கு மூலமாயிருக்கிறதாக நன்றாய்த் தெரிந்திருக்கிற தீமையையும் ஜனவிர்த்தியை நிர்த்தோஷமாய் மட்டுப்படுத்துவதென்பதே. அந்த நியாயாதிபதிகளில் ஒருவராகிய ஸர். பி. பாஸ்டர், M. P அவர்கள் ராஜாங்க காரியங்களில் நிபுணர்தான், அந்தக்கனவான்-செல்வமும் கல்வியும் நிறைந்த வகுப்பாருக்குமாத்திரம் அந்தவிஷயம் தெரிந்திருக்கவேண்டுமென்று ஏன் கோருகிறாரோ அதைப்பற்றி அவரைச் சேர்ந்தவர்களுக்கும் அசேஷ ஏழை ஜனங்களுக்கும் சந்தேகமில்லாமல் நியாயஞ் சொல்லவல்லவர். தற்சாலத்திலே லண்டன்பட்டணத்து வெஸ்டு எண்டு பிரதேசத்தில் வருஷமொன்றுக்கு ஆயிரத்துக்கு 20 வீதம் ஜனனமுண்டாகிறதென்று நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அப்படியிருக்க, பெத்னல்கிரீனிலே, ஆயிரத்துக்கு 93 வீதம் ஜனனமுண்டாகிறது. இப்படிப்பட்ட சங்கதிகளைச் செவ்வையாய்த்தெரிந்துகொள்ளவில்லை. ஐயா, என்மட்டிலோ, ஜனரல்மெடிக்கல் கவுன்சில் சங்கத்தாராகிய எனது வைத்தியசோதராளுடைய கருத்து எனக்குத் தெரியவில்லையென்று நிஷ்களங்கமாய்ச் சொல்லுகிறேன். அவர்களில் டாக்ட்டர் உல்க்ஸ் என்பவர் தவிர, மற்றவர்கள் நீதிபரிபாலனப் பயிற்சியற்றவர்களாயிருந்தபோதிலும், அநேகர் நல்ல சர்ஜியன்களும் வைக்தியர்களுமென்று எனக்குத் தெரியும். மிஸ்டர். ஜெ. ஸ். மில் என்பவர்கொண்டிருக்கிற கருத்தின்படி, அவர்கள் தாங்கள் சேர்ந்திருக்கிற செல்வ வகுப்பினருடைய கோரிக்கையில் கலந்துகொள்வதும், ஏழைகள் மிகவும் எதேச்சை யடைந்து மிகவுஞ் சீரா யிருக்கக் கூடாதெனபதும் நியாயமாய்க் கிரமந்தானா? அவர்களுடைய முகாந்தரங்களை நான் கண்டறியக்கூடவில்லை, ஆனால் இந்தவிஷயம் ஹவுஸ் ஆவ் காமன்ஸ் மகாசபையில் சர்ச்சை செய்யப்படுவதற்கு இது சமயமென்றுமாத்திரம் நான் சொல்லக்கூடும். இதை அந்தச்சபையிலே கூடுமானசீக்கிரத்தில் மூட்டலாமென்று நம்புகிறேன். ஜனங்கள் தாங்கள் பெறுகிறபிள்ளைகளை மிகவும் விவேகமுள்ள அண்டை அயலார் காப்பாற்றுவார்களென்று, தங்களுக்குச் சரீர திடமிருக்குமட்டும் குட்டிகளைப் போட்டுக்கொண்டேபோகிறவரையில், ஜனங்களுக்கு நன்மைசெய்கிறதென்கிற கொள்கை விளங்கினாற்போலத்தான். இந்தக் கடிதத்தைத் தயவு செய்து வாசிக்கிறவர்களெல்லோரும் டாக்ட்டர் ஆல்பட்டுவிஷயத்திலே பூரணபட்சம்வைத்து, விண்ணப்பங்கள் மூலமாயும் திரவிய மூலமாயும் சகாயஞ் செய்வார்களென்று நம்புகிறேன்.

C. R. Drysdale, M. D.

குறிப்பு.—டாக்ட்டர் ஆல்பட்டின்பேரில் லீட்ஸ் பிரதேசத்து சோஷல் பியூரிட்டி அசோஷியேஷன என்னும் பரிசுத்த சங்கம் அல்லது விஜிலன்ஸ் சோசைட்டியின் காரியதரிசியால் பிராதுகொண்டுவரப்பட்டதென்று இங்கே குறிப்பது யுக்தமாயிருக்கலாம். இதனாலே, துரைத்தனத்தார் வாதியாகவும் பிராட்லாவும் பீசாணும் பிரதிவாதிகளாகவும் நடந்த வியாச்சியத்திலே பிராது மூட்டின சோசைட்டியாருடைய ஞாபகம் வருகிறது. மிஸ்டர் ஸ்டெட் அவர்களும் ரிவரெண்டு மிஸ்டர். எ. வாத்தாம் அவர்களும் அந்தப் பரிசுத்த சங்கத்தின் அபிப்பிராயத்துக்கு நேர் விரோதமா யிருப்பதாய்த் தெரிந்துகொள்ள நான் சந்தோஷப்படுகிறேன். உண்மையான பரிசுத்தத்திற்கு முகாந்தரம் சகல புத்திமான்களுக்குந் தெரிந்திருக்கிறபடி சீக்கிரத்தில் பருவகாலத்திலே விவாகஞ் செய்துகொள்வதும், குடும்பத்தைப்பெருக்கப்பார்த்துக் கொள்ளாதிருப்பதுமே.

[National Reformer.]

இந்து சோதிடம்.

(15-வது பக்கத் தொடர்ச்சி.)

ஒருவனுடைய ஜனனகாலத்திலிருக்கிற கிரக நிலைகளுக்கும் அவனுடைய மனது சம்பந்தமும் சரீரசம்பந்தமுமான பலாபலன்களுக்கும் சம்பந்தமிருக்கிறதென்கிற சோதிட சித்தாந்தமே தப்பென்று நான் மறுக்கிறேன். அப்படிப்பட்ட பரிஷ்காரமான மெச்சத்தக்க

யாதொரு சம்பந்தத்தை ருசுப்படுத்தும்படியான இரண்டொரு சங்கதிகளை யெடுத்துக்காட்டும்படி, திருவான்கூரிலும் தஞ்சாவூரிலும் பரோடாவிலுமிருக்கிற மிகவுங் கீர்த்திபெற்ற விசேஷபாண்டித்தியமுள்ள சோதிடர்களைக் கேட்டேன். ஒன்றுஞ் சொல்லமாட்டாமற் போனார்கள். சோதிடர்களை யான் அடிக்கடி கேட்டதாவது—"சாத்திரத்திலுள்ளபடி கிரகநிலைகள் ஜாதகனுடைய சரீரத்தையும் மனதையும் ஸ்திதியையுங் குறித்து அனேக காரியங்களை நிச்சயிக்கின்றனவென்று சொல்லுகிறீர்கள். இப்போது அந்த நபர் ஆணா பெண்ணாவென்று நிச்சயிப்பது மிகவும் முக்கியமானது. ஜாதகத்தினால் தெரியவருகிற கிரகநிலைகளினது என்ன விசேஷங்களால் ஆண் பெண்ணென விளங்குகிறதென்று எனக்குச் சொல்லவேண்டும், அதாவது: என்னசங்கதிகளால் ஆண் பெண்ணென நிச்சயப்படுகிறது? ஒரு அத்தாட்சிமாத்திரங்கொடுத்தால், அதைக்கொண்டு அநேக பரிசோதனைகள்செய்து பார்ப்பேன். பரிசோதனையினால் உண்மை விளங்குமாகில், கிரகங்களுக்கும் ஜாதகனுடைய சரீரத்திற்கும் சம்பந்த மிருக்கிறதென்று நான் திருப்தியடைந்து, சோதிட முழுமையையும் ஒப்புக்கொள்ளுவேன். அப்படிப்பட்ட சம்பந்தமுண்டென்று விளங்கச் செய்யும்படியான வேறே சங்கதியையாவது சொல்லுங்கள். ஜாதகனுடைய மனதைப் பற்றியாவது சரீரத்தைப்பற்றியாவது தெளிவான யாதொரு நிச்சயத்தைச் சரியாகவாகிலும் கிட்டதட்டவாகிலும் தெரிவிக்கிற யாதொரு கிரகநிலை அல்லது பார்வையைச் சொல்லுங்கள்," என்பதே.

இவ்விதமான கேள்விகள் பலமுறைகேட்டும், இதுவரையில் திருப்திகரமான மறுமொழி கிடைத்ததில்லை. மேலும், சொல்லப்பட்ட மறுமொழிகள் மிகவும் மலைவாயும் போக்குகாட்டுவதாயுமிருப்பதுமன்றி, பொய் சாஸ்திரத்தைப் படித்து, அதனால் சீவனஞ் செய்துகொண்டு, அந்தச் சாஸ்திரம் பொய்யானதென்று பிறரைத் தெரிந்துகொள்ளவொட்டாமலும் நினைக்கவொட்டாமலுஞ் செய்யவேணுமென்று எண்ணங்கொண்டவர்கள் சொல்லுகிற மறுமொழிபோலவுமே யிருக்கின்றன. சாட்சிகளைப் பரிசீலனை செய்வதிலும் அவர்களுடைய நடத்தையைக் குறித்துக்கொள்வதிலும்சாட்சியத்தை நம்பலாம் நம்பக்கூடாதென்று நிச்சயிப்பதிலும் அனுபவப்பட்டிருக்கிறவரெவராவது இந்த விஷயத்தில் சந்தேகங்கொள்ளார்.

ஒருவனுடைய ஜனனகாலத்திலுள்ள கிரக நிலைகளுக்கும் அவனுடைய பலாபலன்களுக்கும் எவ்வளவேனும் சம்பந்தமில்லாதது பிரத்தியட்சம்; ஒருவனுடைய ஜனனகாலத்திலே கடிகாரத்தின் மணிமுள் நிமிஷமுட்களின் நிலைமைக்கும் அவனுடைய பலாபலன்களுக்கும் சம்பந்தமிருக்குமானால், மேற்படி கிரகநிலை சம்பந்தமு மிருக்கலாம். உள்ளபடி, ஆகாயமானது பிரமாண்டமான கடிகாரத்தின் தகடுபோலிருக்கிறது. அதில் செல்லுகிற வானவுருக்களாகிய சூரியன், சந்திரன், முதலிய கிரகங்கள் இடைக் கிடைக் சுழிகிற வெவ்வேறு காலத்தைக்குறிக்கிற அனேக முள்ளுகளாயிருக்கின்றன. இந்தத் தோற்றமானவிஷயம் உண்மையை நிச்சயமாயறிய விரும்புகிறவர்களால் யோசிக்கப்படத்தக்கதாயிருக்கிறது. என் மேசையின்பேரில் கிரகவிகாசனபாவனாயந்திரமொன்றிருக்கிறது, இணைத்திருக்கிற கடிகார சூத்திரத்தினால் அதற்கு அசைவு கொடுக்கிறேன். அந்த பாவனாயந்திரத்திலே பூமி சந்திரன் முதலிய கிரகங்களின் பிரதியான உருக்கள் வெவ்வேறு நிலைகளுக்கு வருகின்றன. இவை ஒரு மனிதனுடைய சரீரத்துக்கும் மனதுக்குமடுத்த பலாபலன்களின்மேல் எவ்வளவேனும் அதிகாரஞ்செலுத்தவுமாட்டா, நிச்சயிக்கவுமாட்டா. இதைப்பார்க்கினும் உண்மையான பூமியும் சந்திரனும் கிரகங்களும் விசேஷமொன்றுஞ் செய்யப்போகிறதில்லை; ஏனெனில் கிரகங்கள் பாவனாயந்திர உருக்களைப்பார்க்கினும் மகா பெரியவையாயிருப்பது தவிர, அவ்விரண்டிற்கும் முக்கியமான வித்தியாசமொன்றுமில்லை அவ்விரண்டும் உணர்ச்சியற்ற பதார்த்தம் திரண்டகோளவுருக்கள்தான். கிரகங்களில் ஒவ்வொன்றும் மனிதர்களுக் கிருப்பது போல அங்கக்கட்டு சரீரங்களையும் அந்தக்கரணங்களையும் செயல்புரிவதையும் உடையனவாய், ஒவ்வொருதேவதையாயிருக்கின்றனவென்று ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறதாய்த் தோன்றுகிறது. கல்விமான்களும் அதில் அடிக்கடி கலந்துகொள்ளுகிறார்கள்! இதற்கு ருஜுவாக அடியில்வருஞ் சங்கதிகளை உதாகரிக்கிறேன்:—

"சூரியன்.—க்ஷத்திரிய ஜாதி, வெளிர் நிறமான கண்கள், பித்தம், பிரமாணமுள்ள அங்கங்கள், குட்டைமயிர், இரத்தச்சிவப்பும் வெண்மையுங் கலந்த நிறம்.

"சந்திரன்.—நல்லகுணம், வெண்மை, ஒல்லி, திரண்ட அவயவம், வாயுவும் ஈளையும், மதுரமான பேச்சு, நல்ல பார்வை வைசிய ஜாதி.

"அங்காரகன்.—க்ஷத்திரிய ஜாதி, இரத்தச்சிவப்பு நிறம், படைத்தலைவன், நல்ல குணம், ஆண், வலுத்த சரீரம், தாராளம், பித்தம், சபலசித்தம், சிறுத்த இடை.

"புதன்,—அண்ணகன், சூத்திரசாதி, இளவரசு, பெடாய், கம்மலான பேச்சு, எப்போதும் சாதுரியம், சரசகுணம், கோபம், ஈளை பித்தகுணம் பச்சைநிறம்.

"பிரகஸ்பதி.—குறுகியசரீரம், பொன்னிற மயிரும் கண்களும். மஞ்சள்நிறம், ஆண், பிராமணசாதி, நற்குணமும் ஒழுக்கமும், ஈளை.

"சுக்கிரன்.—அழகான சரீரம், சுத்தவெண்ணிறம், க்ஷத்திரியத்திருமேனி, கவருகிற அழகான கண்கள், அழகான கறுத்த சுருட்டைமயிர், முதலிய.

"சனி.—நீச்ச ஜாதி, மிகவும் கறுப்பு, துர்க்கந்தம், வஞ்சம், சோம்பல், பருமன், உயரம், வற்றினசரீரம், முறட்டுமயிர், வாயு." பெங்களூர் சூரியநாராயணராவு அவர்களால் செய்யப்பட்ட சோதிட சுருக்கம், பக்கம் 9 10.

8.—"சூரியன்—கொஞ்சம் மஞ்சள் நிறமான கண்கள், இரண்டு கைகளையும் நீட்டினால் எவ்வளவு நீளமோ அவ்வளவு உயரம், பித்தவுடம்பு, தலையில் மிகவும் கொஞ்சமயிர்.

"சந்திரன்.—திரண்டு மெலிந்தசரீரம், வாயு, ஈளை, பாண்டித்தியம், மிருதுவான ஓசை, அழகான கண்கள்.

"9.—அங்காரகன்—கூர்மையான கொடிய கண்கள், வாலிபசரீரம், உதாரத்துவம், பித்தம், சபலசித்தம், சுருங்கினஇடை.

"புதன—தெத்துவாய், பரிகாசகுணம், வாயு, பித்தம் ஈளை.

"10.—பிரகஸ்பதி.—ஸ்தூல சரீரம், மஞ்சள்நிற மயிரும் கண்களும், புத்திவிசேஷம், ஈளை.

"சுக்கிரன் சுகவாழ்வு, அந்தமுள்ள சரீரம், அழகான கண்கள், வாயு, ஈளை, கறுத்த சுருட்டைமயிர்.

"11. சனி—சோம்பல், பொன்னிறமான கண்கள், மெலிந்து நெட்டையான சரீரம், பெரும்பல், முறட்டுமயிர், வாயு" வராஹமிஹிர என்பவரால் செய்யப்பட்ட பிரிஹத் ஜடக என்னுங் கிரந்தத்திற்கு திருவாதி ஜோதிஸ் சுந்திர சபாஸ்தாபகராகிய ந. சிதம்பரம் ஐயர், B. A. F. T. S. அவர்களால் செய்யப்பட்ட இங்கிலீஷ் மொழி பெயர்ப்பு, அத்தியாயம் 2, ஸ்லோகம் 8-11.

விவேகியாகவாவது கல்விமானாகவாவதிருந்து இதை வாசிப்பவர் மேலேஉதகரித்திருக்கிற சங்கதியை ஒப்புக்கொள்ளுவாரென்றாவது நம்புவாரென்றாவது நான் எவ்வளவேனும் நினைக்கவில்லை. தேசாபிமானமும் சூட்சும புத்தியுமுள்ள சிலர் உதகரிக்கப்பட்ட சங்கதி ஒட்டலங்காரமாகச் சொல்லப்பட்டதென்று சோதிடத்தின்பட்சத்தில் சமாதானஞ் சொல்லலாம். அப்படியே வைத்துக்கொள்வோம்; ஆயினும் அநேகர் அதை நேரான அர்த்தத்திலேயே கொள்ளுகிறார்களென்று எனக்குத் தெரியும். சூரியன் சந்திரன்முதலான கிரகங்கள் மனிதனுக்கிருப்பதுபோலவே சரீரத்தையும் மனதையுமுடைய தேவதைகளாயிருந்தனவென்று ஓர் காலத்தில் ஜனங்களுக்கு நம்பிக்கையுண்டாக்கப்பட்டது; கிரகங்கள் தத்தம் நிலைகளுக்குத்தக்கபடி ஏறவாவது குறையவாவது அதிகாரமுடையவையாயிருந்தனவென்றும், அவைகளுக்கு ஒன்றற்கொன்று சத்துரு மித்துருவாயிருந்தனவென்றும், அவற்றில் சில வஞ்சமுள்ளதாயிருக்கமற்றவை தயாளமாயிருந்தனவென்றும்,இப்படியாகமனிதர்களுக்குச்சொல்லத் தாராளமானபாதைஏற்படுத்திவிடப்பட்டது. சிலகிரகங்கள்ஒவ்வோர்காலத்திலே மிகவுங்கோபமாயிருந்தன, ஆனால்பிராமணர்களுக்கும்,கிரகங்களையும் அவற்றின் குணங்களையும்அறிந்திருப்பதாக நினைக்கப்பட்ட சோதிடனுக்கும்

தானங்கொடுப்பதினாலே சாந்தி செய்து வசப்படுத்திக்கொள்ளக்கூடியதாயிருந்ததே. சோதிடனோடு கூட குடும்பப் புரோகிதனுக்கும் அக்கறை யுண்டாயிருந்தது, ஆகலால் இருவரும் கலந்து கூடிக்கொண்டு கிரகங்களின் குணம இன்னபடிக்கிருக்கிறதென்றும், அவற்றிற்கு இன்ன சாந்தி செய்யவேணுமென்றுஞ் சொல்லிவந்தார்கள். இவ்வண்ணமாய், பேதைமையும் மூடபக்தியுங் குடிகொண்ட ஜனங்களுக்குள் சோதிடம் ஓங்கிவளர்ந்தது. மடமையும் மூடபக்தியுமுள்ள ஜனங்களிருக்கிறவிடங்களிலே சோதிடம் இன்னும் சுணங்கிக்கொண்டிருக்கிறது. இந்து ஜனங்களுக்குள்ளே ஸ்திரீகள் அதிக பேதைமையும் மூடபக்தியுமுள்ளவர்களாயிருப்பதால, அவர்களுக்குத்தான் சோதிடத்தில அதிக நம்பிக்கையுண்டாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஸ்திதியிலிருந்தகாலத்திலே ஐரோப்பாவிலும் சோதிடத்தில் அதிக நம்பிக்கை யுண்டாயிருந்தது. ஆனால் கல்வி விர்த்தியாக ஆக, அது க்ஷீணித்து மறைந்தேபோயிற்று, தற்காலத்திலே, ஐரோப்பாவில் கல்விமானெவனுக்கும் சோதிடத்திலே எள்ளளவேனும் நம்பிக்கை கிடையாது. இந்தியாவானது சோதிடம்பிறந்து வளர்ந்த இடமாயிருந்தாலும், நிச்சயமாகவே இந்தியாவிலும் அவ்வாறாகத்தான் முடியும். இப்படி சித்தியாவதற்குக் காலமும் கல்வியுந்தான் வேண்டும்.

(இன்னும்வரும்.)

ஸ்ரீ லோகரஞ்சனி.

தத்துவவிவேசினிநங்காய், சிலமாசங்களாய் நீ அன்புடன் கூறுவதை யான் கண்கூர்ந்துவருகிறேன். சைவ வைஷ்ணவ கிரிஸ்தவ முதலிய சகல மதங்களையுங் கண்டிக்கின்றாய். யான சிவமதஸ்தன், உண்மை யறியவேண்டி, சைவத்தில் உன் கண்டனைக் குட்பட்ட விஷயங்களை யான ஆராய்ந்தும், ஏனைய மதங்களின் விஷயங்களைத் தெரிந்தோரைக் கேட்டும் தெளிந்துவந்துகொண்டிருக்குங்கால், நிகழும் ஜனவரிமீ 15உ வெளிப்பட்ட நினது தங்கையாகிய ஸ்ரீ லோகரஞ்சனி பத்திரிகையின் 11-ம் பக்கம் "புலைகொலையுற்ற பேய்மதக்கூத்து" என்னும் மகுடத்தின்கீழ் பத்தாமவரிமுதல் "அவர்கள் (கிரிஸ்தவர்கள்) இந்து சாஸ்திரங்களிற் கற்றவை இந்துக்களிற் சாரமற்றதெனக் கழித்துக்கிடக்குஞ் சில ஆபாசங்களே!" என்று வரைந்திருப்பதைப்பார்க்க எனக்காச்சரியமுண்டாயது; ஏனெனில், இந்துசாஸ்திரங்களிலும் ஆபாசங்க ளிருக்கின்றனவென்று யான் நினைத்ததில்லை. இந்த ஆபாசங்களைக் கண்டு கழித்தவர் யாரோ? நின்தங்கையைப் போஷித்துவரும் ஸ்ரீ விசிஷ்டாத்வைத சித்தாந்தப்ரபோத சங்கத்தாரா யிருந்திருக்கலாம்; யாவராயினும் நிமித்தமில்லை; "கழித்துக் கிடக்குஞ் சில ஆபாசங்கள்" எனறதனாலே, இன்னும்அநேக மிருக்கலாமென்றுதோன்றுகிறது. இனிஆராய்ச்சிசெய்யச்செய்யஅவைகொஞ்சங்கொஞ்சமாய் வெளிப்பட்டுத் தள்ளுகடையாகும்போலும். இந்து சாஸ்திரங்களிலே யான் ஆராய்ந்துபார்ப்பவை கழித்துவிடப்பட்ட அந்த ஆபாசங்களா யிருந்தாலு மிருக்கலாமே. அவை இன்னவையென்று எனக்குத் தெரியுமாகில், அவற்றை யொழித்து மற்றவற்றை ஆராய்வேன். நீ முற்றுமே ஆபாசமென்பதனால் நின்னைக் கேட்டுப் பலனில்லை. இந்துசாஸ்திரங்களில் ஆபாச மிருப்பதாக ஒப்புக்கொள்ளுகிற நின் தங்கைக்கு நன்றாய்த் தெரிந்திருக்குமாதலால், இதுவரையில் கழிக்கப்பட்டிருக்கிற ஆபாசங்களை இத்ததியில தெரிவிப்பதுமல்லாமல், இனிகழிக்கப்படுபவற்றையும் அப்போதப்போது தெரிவிக்கும்படி நின் தங்கையைக் கேட்டுக்கொள்வாயென்று மன்றாடுகிறேன்.

மேற்படி பத்திரிகை 9ம் பக்கம் முதற்கலத்திலே, ஆன்மாவும் மாயையும் ஈஸ்வரனுமாகிய தத்துவப்பொருள்கள் நித்தியமாயுள்ளனவென்றும், ஆன்மாவும் மாயையும் கடவுளின் ஆதீனத்திலிருக்கின்றனவென்றும், கன்மம் அநாதியென்றும், இவ்வாறு கூறியிருப்பதை யான் வாசித்தபோது, பிர்மத்தினிடமாய் மாயை பிரதிபிம்பித்ததென்றும், மனிதனது பாபகிருத்தியத்தால் கன்மம் விளைந்ததென்றும் யான் கேள்விப்பட்டிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. தீக்குணமுடைய மாயையும் கடவுளைப்போலவே அநாதியாயிருப்பதுமன்றி, கடவுளினது ஆதீனத்திலுமிருக்கிறதென்றதினால், பூரண சற்குணமுடையவராயும் சர்வாந்திரியாமியாயும் விளங்குகிற கடவுள் விகாரியான மாயையைத் தன்னிடத்து ஐக்கமாகச் சேர்த்துவைத்துக்கொண்டிருக்கின்றனரோ, அல்லது எஜமானனும் வேலைக்காரனும்போலத் தனது ஆதினத்தில் வைத்திருக்கின்றனரோ எனக்கு விளங்கவில்லை. கன்மம் அநாதியென்றதனால், அது எப்படி விளைந்ததோ? கடவுளாகிய அநாதிப்பொருளொன்றிருக்கும்போதே அதற்குச் சேட்டையுமிருக்குமாதலால், அச்சேட்டைதான் அநாதிகருமமாயிற்றோ! ஒன்றும் விளங்கவில்லை. மேறகூறியவை சுருதிசம்மதமோ, எழுதினவரது சித்தாந்தமோ அதுவும் தெரியவில்லை. அன்றியும், "நித்தியமாயுள்ளனவென்றும்," "ஆதீனத்தி லிருக்கின்றன வென்றும்," "ஒழித்திடவேண்டுமென்றும்," இவ்வாறு உம்மை கொடுத்து அடுக்கிவந்த வாக்கியங்கள் எங்கே எதைக்கொண்டு முடிந்ததோ அதுவுந் தெரியவில்லை, ஆதலால் என்மீது தயைகூர்ந்து என் சந்தேகங்களை நிவர்த்திசெய்வாயென்று கோருகிறேன்.

A. P.

[ஸ்ரீ லோகரஞ்சனியிலே, கடவுளையும் ஆன்மாவையும், மாயையையும், கன்மத்தையுமபற்றிக் கூறியிருப்பதை (ஆபாசங்களிருப்பினும்இராவிடினும்) ஒப்புக்கொண்டு ஒழுகுஞ் சமயங்கள் ஆஸ்திகமதங்களென்றும், ஒப்புக்கொள்ளாத மற்றமதங்கள் நாஸ்திகமென்றும், ஆஸ்திக நாஸ்திக மதங்களின் இலக்கணங்களைக் கூறியிருக்கிறதேயல்லாமல், அவற்றைச் சித்தாந்தப்படுத்திச் சொல்லவந்ததல்ல. அவை முற்றுமே ஆபாசமென்பது எமது அபிப்பிராயமாதலாலும், அவற்றைப்பற்றி முந்திய பத்திரிகைகளில் பலவிசை கூறியிருப்பதாலும், வேண்டுமாயின், ஆபாசங்களை மறுபடி எடுத்துக் கூறுவோமேயன்றி, அந்தச் சங்கதிகளை விளங்கச்செய்யவேண்டிய கடமை அவற்றை எழுதினவரதேயாகும். உம்மைகொடுத்தடுக்கிவந்த வாக்கியங்கள் சரியாய் முடிவுபெற்றிருப்பினும் இராவிடினும், மொத்தத்தில் விளங்கும்பொருளை யாம் மேலே குறித்திருக்கிறோம். அது பிசகாயிருப்பினும், யாம் தலையிட்டுக்கொள்ளும்படியான அவ்வளவு முக்கியமான விஷயமன்று. பெருத்த சங்கதியை ஆலோசித்துத் தொடர் வாக்கியங்களை எழுதும்போது ஒவ்வோர் சமயத்தில் எவர்க்கும் அவ்வித பிழை படுதலுண்டு. E. D.]

மோட்ச உலகம் எங்கேயிருக்கிறது?

(முன்னே பாதிரியாராயிருந்த ஜோசெப சைம்ஸ் என்பவர் பிஷப்பு மூர்ஹவுஸுக்கு எழுதிய கடிதம்.)

ஐயா,

மண்ணுலகத்திலிருந்து விண்ணுலகத்திற்குப்போனவரொருவரும், அவ்விடத்திலிருந்து இவ்விடத்திற்கு வந்தவரொருவரும் எப்போது மில்லையென்று உள்ளபடி எனக்குந் தெரியும், உமக்குந் தெரியும். அந்த வீரச் செய்கையை இன்றைக்குத்தான் முதல்தடவை நீர் கேள்விப்படுவீராகில், உண்மையாகவே வீட்டில் சொல்லிக்கொள்ளுகிற கதைகளைக்கேட்டு எல்லோரும் ஆனந்திப்பதுபோல நீரும் ஆனந்திப்பீர். இந்தக்கதைகளை நான் எவ்வளவு நம்புகிறேனோ அவ்வளவுதான் நீரும் நம்பக்கூடும். நீர் உமது மதத்தைவிட்டு வருவதற்காக நான் எழுதவில்லை—அது அதிக புண்ணியமான வேலையாகும்—ஆனால், மிகவும் சாதாரணமாய் அதிக நம்பிக்கையானவிதமாக நீர் பேசுகிறபடியால, உம்மால் மோசம்போகிறவர்கள் அப்படிப்பட்ட ஏதோ ஓர் ஸ்தலத்தை நீர் அறிந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறார்களானதுபற்றி, அவர்களுடைய கண்களைத் திறக்கும்படி எழுதுகிறேன். இவ்வுலக வாழ்க்கைக்கு இப்போது எனக்கு எவ்வளவு கவனமும் எண்ணமுஞ் செல்லுகிறதோ அவ்வளவு உமக்குஞ் செல்லுகிறது நிச்சயமே; ஆனால் பேரின்பமுண்டாகுமென்று நீர் முந்திச் சொல்லுகிற ஜோசியம் இன்னுந் துன்பத்தை விளைக்கிறபடியால், அதை வெளிப்படுத்துவது எனது கடமையாயிருக்கிறது.

மோட்சவுலகம் சூரிய மண்டலத்தைப் பார்க்கினும் தொலைதூரத்திலில்லையென்று வைத்துக்கொண்டாலும், அவ்விடம் போய்ச் சேர நீராவிவண்டிக்கு ஒரு மணி நேரத்திற்கு ஐம்பது மயல் விழுக்காடு 200 வருஷம் செல்லுமென்றும், பீரங்கி குண்டு ஒருமணிநேரத்திற்கு 1000 மயல் விழுக்காடு பறந்தபோதிலும், அதற்குப் பத்துவருஷஞ் செல்லுமென்றும், முந்திய கடிதத்தில் எழுதியிருக்கிறேன். மோட்ச வுலகம் இருக்கிறது மெய்யானால் வான உருக்களின் எல்லைகளைக் கடந்து அப்

பாலிருக்கவேண்டும். இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட மிகவுந் தூரமான கிரகமாகிய நெப்ட்டியூனனது நமக்கும் சூரியனுக்கு மிருக்கிற தூரத்திற்குச சுமார் முப்பது பங்கு தூரத்திலிருக்கிறது. ஆகலால் நமது நீராவி வண்டி நெப்ட்டியூனிடம் செல்லுவதற்கு சூரியனிடஞ் செல்லுவதற்குப் பிடிக்குங்காலத்திற்கு முப்பதுபங்கு அதிகமாகப் பிடிக்கும், அதாவது 6000 வருஷஞ் செல்லும். ஈனக் என்பவன் 5000 வருஷத்துக்கு முன்னமே பூமியைவிட்டுப்போனதாகச் சொல்லுகிறார்கள்; அவன் நமது நீராவி வண்டியைப்பார்க்கிலும் அதிவேகமாய்ப் போயிராவிட்டால், மோட்ச வுலகம் நெப்ட்டியூனைவிட அதிகதூரத்திலில்லாவிடினும், அவ்விடம் போய்ச்சேர அந்தக் கிழவனுக்கு இன்னும் அநேக நூற்றாண்டுகள் செல்லும். அவனிமித்தம் இடங்களை மாற்றிவிட உமக்கு இஷ்டமிராதெனறு நம்புகிறேன். அவன் நமது பீரங்கி குண்டு விசை வீதம் ஓடினாலும், அந்த ஓட்டத்தினால் அவன் ஒரு விநாடியாவது இளைப்பெடுக்து நின்றுவிடாத பட்சத்தில், அந்தப்பயணத்திற்கு 300 வருஷஞ்செல்லும். இபபோது ஈனக் என்பவன் எங்கேயிருக்கலாமென்று நினைக்கிறீர்? அவனைக்குறித்து ஜூட் எனபவரால் உதகரிக்கப்பட்ட சிறந்த கிரந்தத்தை நீர் வாசித்திருக்கிறீர், அதை ஆதி தேவாலயத்து வேத புத்தகமென்றும் மதித்திருக்கிறீர், அதில் சொல்லியிருக்கிற அற்புதமான பபணங்கள் ஜினிசிஸ் என்னும் முதலாகமத்தில் சொல்லியிருப்பதுபோல அவ்வளவு உண்மையானவை யென்று நீர் நினைக்கவில்லையா?

ஆனால ஈனக் என்பவனே இன்னும் வீடுபோய்ச்சேர்ந்திரானாகில், பிந்திச் சென்ற இலிஜா, ஏசு, இவர்களுடைய கெதியென்ன? நம்முடைய கணக்குபபடி ஏசு இன்னும் மூன்றிலொருபங்குவழி போயிருக்கமாட்டார்; அப்படியிருந்தும் உம்முடைய சோதரர்களில் அநேகர் அவரைத் திரும்பி இங்கே வரும்படி அழைத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னத்திற்கு? பிரார்த்தனையாகிய தந்தி சமாச்சாரம் வழியிலிருப்பவர்களுக்குச் சேராதாதலால், தன்னை மறுபடியும் வரும்படி எவர்களாவது பிரார்த்தனை செய்துகொண்டிருக்கிறார்களென்று இன்னும் அநேக ஆயிரம் வருஷம்வரையில் அவருக்குத் தெரியவராது; பிரார்த்தனையாகிய தந்தி சமாச்சாரத்திற்கோ கணக்கில்லை, அது அடிக்கடி அனுப்பப்படுகிறது, அவர்வீடுபோய்ச் சேர்ந்தபின்பும், அவற்றையெலலாம் வாசித்து ஆலோசனைசெய்து பார்ப்பதற்குப் பின்னுஞ் சில ஆயிர வருஷங்கள் செல்லலாம். ஆகலால் குறைந்தது இருபதினாயிரம் வருஷம்வரையிலே அவர் இந்த வழிநோக்கி வருவாரென்று நீர் நினைக்கவேண்டாம்; நான் பந்தயம் வைக்கிற வழக்கமில்லையாயினும், நீர் ஒன்றுவைத்தால் நான் ஆயிரம் வைக்கிறேன், அவர் ஐந்நூறாயிரம்வருஷம்வரையில் மறுபடி இந்த வழி திரும்பபபோகிறதில்லை. அந்த காலத்திற்குள், வேதபுத்தகத்திலே புது ஏற்பாடு உண்மையாயிருக்குமாகில், உமக்கும் எனக்கும் ஐந்துலட்சவருஷகாலம நரகாக்கினி அனுபவமுண்டாயிருக்கும்; அப்போது நான் உமக்கு அநேக கடிதங்கள் எழுதினதையும் நீர் வதிலுத்தரவு சொல்லாதிருந்ததையுங் குறித்து ஆலோசிப்பீர். ஈனக்காவது ஏசுவாவது எலிஜாவாவது நமது பீரங்கிகுண்டுவிசை வீதம் ஓடியிருந்தாலும், பரமண்டலத்திற்கல்லாவிடினும் நெப்ட்டியூன் மண்டலத்திற்குப் போய்ச்சேர சுமார் மூந்நூறுவருஷம்பிடித்திருக்கும். எப்படிப்பட்ட மகாத்துமாவும் அவ்வளவு மகத்தான வேகத்தைத் தாங்குவாரென்று நினைக்கிறீரா? ஒரு அற்புதத்தைப்போல வேறொரு அற்புதமும் அவ்வளவு சுலபந்தான்.

அநேக தூமகேதுக்கள் நெப்ட்டியூன் மண்டலத்திற்கப்பால் தூரத்தில் செல்லுகின்றன. ஹால்லியென்பவர் விவரித்துச் சொன்ன தூமகேது பூமிக்கும் சூரியனுக்குமிருக்கிற தூரத்தைப்பார்க்கிலும் 36 பங்கு தூரத்தில் செல்லுகிறது. 1844 ஆம் வருஷத்திய தூமகேதுவின் தூரத்தை சூரியனிடத்திலிருந்து எட்டுவதற்கு நமது வண்டித்தொடருக்கு 800,000 வருஷஞ் செல்லும், நான் அடிக்கடி சொல்லிவருகிற பீரங்கி குண்டானது அவ்விடம்போய்ச்சேர நாற்பதினாயிரம் வருஷம்பிடிக்கும். இன்னும் மோட்ச உலகம தென்படவில்லை! இன்னும் விசாரிப்பது யுக்தமென்று உமக்குத் தோன்றுகிறதா? ஐயோ பரிதாபம், உமது மகான்களாகிய ஈனக், எலிஜா, ஏசு! இவர்களுக்காக நான் துக்கிக்கிறேன். ஆனால் வானவுருக்களும அதின் தூமகேதுக்களுமிருக்கட்டும், ஆகாய விரிவை அளந்து பார்ப்போம. நிலையான நட்சத்திரங்களில் அதிக சமீபத்திலிருப்பது இப்பூமண்டலத்திற்கு மிகவும் விளக்கமாய்த் தோன்றுகிறது. அது மிகவும் பிரகாசமான ஆல்பாசெண்டாரி என்னும் நட்சத்திரந்தான். அது வானத்திலுள்ள எல்லாநட்சத்திரங்களிலும் அதிசமீபத்திலுள்ளது. அது நமக்குச் சுமார் 2,00,00,00,00,00,000 மயல்தூரத்திலிருக்கிறது, அதாவது, சூரியனைப்பார்க்கிலும் இரண்டுலட்சம்பங்குதூரத்திலுளளது, இதுவோ மனதினால் கருதக்கூடாததூரம். அந்தப் பயணத்தை முடிக்க நமது நீராவி வண்டிக்கு ஒருமணிநேரத்திற்கு ஐம்பது மயல் விழுக்காடு நானூறுலட்சம வருஷஞ் செல்லும்! ஒருவனுடைய பிராணனைக் கழற்ற இதுவேபோதுமானது, அல்லவா? நமது பீரங்கி குண்டுக்கு இருபதுலட்சம் வருஷஞ் செல்லும். உமது மோட்சவுலகம் அந்த ஆல்பாசெண்டாரி நட்சத்திரத்தைப் பார்க்கினும் அதிகதூரத்திலில்லையென்றும், ஏசுவானவர் நமது பீரங்கி குண்டு வேகத்தினளவாகப பரமண்டலத்திற்கேகினாரென்றும் வைத்துக்கொண்டாலும், இன்னுங் கிட்டத்தட்ட இருபதுலட்சம்வருஷம்வரையிலே அவ்விடம்போய்ச் சேரமாட்டார். இந்த பயங்கரமான சங்கதிகள் உமக்குத் தெரிந்து யோசித்திருப்பீராகில், அதை நெடுநாளுக்கு முன்னமேதானே உமது சீடர்களுக்குச் சொல்லியே யிருக்கவேண்டும்; அதுமுதற்கொண்டு, ஒரு நரமனிதன் அப்படிப்பட்ட பயணத்தை முடிக்கக்கூடுமென்று நம்புவது சுத்த ஆபாசமா யிருக்கிறதென்றும், அவர்களுக்கு நீர் சொலலிவந்தே யிருக்கவேண்டும். பாதிரிமார்கள் ஞானமடைந்து யோக்கியர்களாயிருப்பார்களாகில், ஜூலியஸ் சீஜர் ஏகுதலைப்பற்றிச்சிரித்ததுபோல, ஏசுவானவர்பரமண்டலத்திற்கேகினதைப்பற்றிச்சிரிப்பார்கள். வான சாஸ்திரமூலாதாரங்களை யறிந்திருக்கிற யோக்கியர்கள் ஏசு பரமண்டலத்திற்கேகின கதையை எழுதியிருக்கமாட்டார்கள்! அதை இப்போது பிரசிங்கிப்பதற்கு உமக்கென்ன சுதந்தரமிருக்கிறது? ஒன்றுமில்லை. அது முழுதும் சுத்தக் கட்டுக்கதையென்று நீர் அறிந்திருக்கவேண்டும்; அதுமிகவும் கோணங்கிக்கூத்துக்கதையாதலால் சாஸ்திரக் கியானிகளின் கூட்டத்திலே சொல்லத் தகாது. நீர் பயங்கரமான சங்கதியைச் சொன்னால் அதைக் கேட்பவர்கள் நடுங்குவார்களென்பதற்குச் சந்தேக மில்லை; ஆனால் மிகவும் ஈனமாக அவர்களை மோசஞ் செய்வதைப் பார்க்கினும் நடுங்கச் செயவதுமேலு. அதிர்ஷ்டம் வருமென்று சோதிடஞ் சொல்லுகிற வகுப்பார், நாபுந்தன்மையுள்ளவர்களைக் குருக்கள்மார்கள் வஞ்சிப்பதுபோல, ஒருபோதும் அவ்வளவு வஞ்சிக்கிறதில்லை. ஆனால் நமது சங்கதி இவ்வளவோடு முடிந்ததா? முடியவில்லை. ஆல்பாசெண்டாரி நட்சத்திரம் நிலையானநட்சத்திரங்களுக்குள் அதிசமீபத்திலுள்ளது, பிரபஞ்சத்தில் நமது பயணத்திற்கு முதல் மயல்கல்லா யிருக்கிறது. ஒரு செக்கண்டுக்கு 186.000 மயல்விழுக்காடுசெல்லுகிற ஒளிக்கு அந்த ஆல்பாசெண்டாரி நட்சத்திரத்தினிடத்திலிருந்துவர மூன்று வருஷமும் ஏழுமாசமும் பிடிக்கின்றன. ஆதலால் ஏசுவானவர் ஒளியைப்போல வேகமாய்ப்பறந்திருந்தாலும், அந்த நட்சத்திரமவ்வளவுதூரம் செல்லுவதற்கு அவ்வளவுகாலம் பிடித்திருக்குமே. நாம் அங்கேபோனாலும், மோட்சவுலகம் கண்ணுக்குத் தென்படவில்லையே. ஆர்கிட்டியூரஸ் என்னும் நட்சத்திரம் அதற்கு ஏழுபங்கு அதிகதூரத்திலிருக்கலாம்; வடமூனை துருவ நட்சத்திரமானது அதனிடமிருந்து ஒளி வருவதற்கு சுமார் ஐம்பது வருஷம் செல்லும்படியான அவ்வளவுதூரத்திலிருக்கிறது; கபெல்லாநட்சத்திரத்தின் ஒளி எழுபது வருஷத்தில் கூட நம்மிடம்வந்து சேரவில்லை.

(இன்னும்வரும்.)

MADRAS:—PRINTED AT THE VURTHAMANATHARUNGINI PRESS.